தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – பேரூராட்சிகள் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி –பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 20 சதவீதத்திற்கும் மிகாத பணியிடங்களில் பேரூராட்சிகளில் பணிபுரியும் தகுதி வாய்ந்த பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்ற அனைத்து கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களை பணி மாறுதல் மூலம் நியமனம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பேரு.2) துறை

அரசாணை (நிலை) எண்.150 நாள்.19.8.98

பார்வை

1. அரசாணை (நிலை) எண்.64, ஊ.வ.துறை, நாள்: 5.2.85
2. அரசாணை (நிலை) எண்.300, ஊ.வ.துறை, நாள்: 6.12.88
3. அரசாணை (நிலை) எண்.263, ஊரக வளர்ச்சி துறை, நாள்: 23.11.90
4. அரசாணை (நிலை) எண்.300, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 28.8.92
5. அரசாணை (நிலை) எண்.43, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 15.2.94
6. மாநிலத் தலைவர், தமிழ்நாடு பதிவுரு எழுத்தர்கள் நல இயக்ககம், சென்னை.5 விண்ணப்ப நாள்: 14.11.94
7. பேரூராட்சிகள் ஆணையர், கடித எண்.9769/95/அ4, நாள்: 15.11.95
8. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை.2 கடித எண்.2657/சிடி–பி2/97 நாள்: 27.4.98

---

**ஆணை:**

அரசாணை (நிலை) எண்,64 ஊரக வளர்ச்சி துறை, நாள்.5.2.85ல் பேரூராட்சிகளில் பணிபுரிந்து வந்த தலைமை எழுத்தர், வருவாய் ஆய்வாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகியோரின் பணி அரசு நிலையாக்கப்பட்டது. பின்னர் அரசாணை நிலை எண்.800, ஊ.வ.துறை, நாள்: 16.12.88ல் பேரூராட்சிகளில் உள்ள வரித்தண்டலர்களின் (நிலை–1) பணியும் அரசு நிலையாக்கப்பட்டது. இதையடுத்து அரசாணை நிலை எண்.300, ப.ம.நி.சீ.துறை, நாள்: 28.8.92ல் மேற்படி பணியிடங்களை தமிழ்நாடு அமைச்சுப் பணியின்கீழ் கொண்டு வரும்வகையில் தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளுக்கு தக்க திருத்தங்கள் வெளியிடப்பட்டன. மேற்படி பணியிடங்கள் அரசு நிலையாக்கப்படுவதற்கு முன்னர் பேரூராட்சிகளில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்கள்பதிவுரு எழுத்தர்களாகவும், வரித்தண்டலர்கள் மற்றும் பதிவுரு எழுத்தர்கள் இளநிலை உதவியாளர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்டு வந்தனர். இளநிலை உதவியாளர் மற்றும் வரித்தண்டலர் பணியிடங்கள் அரசு நிலையாக்கப்பட்டதையடுத்து பேரூராட்சிகளில் அலுவலக உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் பணியிடங்களில் பணிபுரிந்து வருவோருக்கான பதவி உயர்வு வாய்ப்பு அறவே அற்றுப்போய் விட்டது. எனவே,நீண்டகாலமாக பதவிஉயர்வு அற்று பதிவுரு எழுத்தர்களாகவே பணியாற்றி வரும் தங்களுக்கு பதவி உயர்விற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி தருமாறு தமிழ்நாடு பதிவுரு எழுத்தர்கள் நல இயக்கம் மற்றும் தமிழ்நாடு பேரூராட்சிகள் பதிவறை எழுத்தர்கள் சங்கம் முதலியன அரசைக் கேட்டுக் கொண்டுள்ளன.

2. மேற்படி கோரிக்கை குறித்து பேரூராட்சிகள் இயக்குநரின் குறிப்புரை கோரப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்கள் 1.4.79 முதல் அரசு நிலையாக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.963, ஊ.வ.துறை, நாள்: 23.11.90ல் பஞ்சாயத்து வளர்ச்சித் துறையில் இளநிலை உதவியாளர், ஊர் நல அலுவலர் நிலை–2 மற்றும் காசாளர் பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 10% இடங்களுக்கு அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் பதிவுரு எழுத்தர்களுக்கு பதவி உயர்வளித்து நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் அடிப்படையில் பேரூராட்சிகளில் பணிபுரியும் பதிவுரு எழுத்தர்களுக்கும் பதவி உயர்வளிக்கும் வகையில் ஆணை பிறப்பிக்கும்படி பேரூராட்சிகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இப்பொருள் குறித்து விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. பேரூராட்சிகள் இயக்குநரால் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.963, ஊ.வ.துறை, நாள்: 23.11.90ல் பஞ்சாயத்து வளர்ச்சிப் பிரிவில் இளநிலை உதவியாளர், ஊர் நல அலுவலர், நிலை–2 மற்றும் காசாளர் பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களில் 10 சதவீதம் காலியிடங்களுக்கு மட்டுமே ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தகுதி வாய்ந்த பதிவுரு எழுத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கி நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் அரசாணை (நிலை) எண்.43, ப.ம.நி.சீ.துறை, நாள்: 15.2.94ல் அரசு அலுவலகங்களில் இளநிலை உதவியாளர், இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர், மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களில் ஒவ்வொரு பணியிடத்திலும் 20% க்கும் மிகாத காலி பணியிடங்களில் பதிவுரு எழுத்தர்கள் மட்டுமல்லாமல் அலுவலக உதவியாளர் போன்ற கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரிவோருக்கும் பதவி உயர்வளித்து நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இரண்டு அரசாணைகளின் அடிப்படையில் பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு பதவி உயர்வளிக்கும் வகையில் ஆணையிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையமும் 1954ம் ஆண்டு தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 16(b) பிற்பகுதியின்படி இதற்கு தனது இசைவினை தெரிவித்துள்ளது.

4. மேற்கூறிய சூழ்நிலையில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பேரூராட்சிகளில் உள்ள இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 20 சதவீதத்திற்கும் மிகாத பணியிடங்களில் பேரூராட்சிகளில் பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்ற அனைத்து கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரியும் தகுதிவாய்ந்த நபர்களுக்கு பணி மாறுதல் மூலம் நியமனம் செய்ய அரசு ஆணையிடுகின்றது :-

(1) தமிழ்நாடு பேரூராட்சிப் பணியமைப்பில் முதன்முதலில் வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப்பட்டு பதவி உயர்வு வாய்ப்பில்லாத பணியிடங்களில் பணிபுரிவோர் அல்லது ஒருமுறைக்கு மேலும் பதவி உயர்வு பெற்றும் இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர், தட்டச்சர் மற்றும் வரித்தண்டலர் பணியிடங்களுக்கான ஊதியத்திற்கும் குறைவான ஊதிய விகிதம் கொண்ட பணியிடங்களில் பணிபுரிவோரை மட்டுமே நேரடி நியமனம் செய்வதற்குரிய தகுதிகளைப் பெற்றிருப்பதற்குட்பட்டு பணிமாறுதல் மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் வரும் வரித்தண்டலர், இளநிலை உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் பணிமாறுதல் மூலம் நியமனம் செய்யப்படுவதற்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

Scanned by CamScanner

(2) பணிமாற்றம் மூலம் செய்யப்படும் நியமனம் சம்பந்தப்பட்ட அலகு அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ள பேரூராட்சிப் பணியில் கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரிவோருக்கு மட்டுமே பொருந்தும்.

(3) வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் அல்லது இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர் அல்லது தட்டச்சர் பணியிடங்களுக்கு பணிமாறுதல் மூலம் செய்யப்படும் நியமனங்கள் மேற்படி பணியிடங்களில் ஒவ்வொன்றிலும் ஏற்படும் காலியிடங்களில் 20 சதவீதத்திற்கு மிகாமல் இருக்குமாறு உறுதி செய்யப்பட வேண்டும்.

(4) இவ்வாறு பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் நியமனம் செய்யப்பட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 20 சதவீதம் காலிப் பணியிடங்களை முதன்முதலில் வேலை வாய்ப்பகங்கள் மூலம் நியமனம் செய்யப்படாத கீழ்நிலைப் பணியாளர் ஒருவரை நியமனம் செய்ய எந்த நிலையிலும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது.

(5) ஒருவர் வரித்தண்டலர், இளநிலை உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் அல்லது தட்டச்சர் பணியிடங்களுக்கு நியமனம் செய்யப்பட அவர் கீழ்நிலைப் பணியில் 7 ஆண்டுகளுக்கு குறைவில்லாமல் முறையான பணி முடித்திருக்க வேண்டும்.

(6) பதிவுரு எழுத்தர் போன்ற பதவி வகிப்போருக்கும் எழுத்துப்பணி செய்யும் பிறருக்கும் எழுத்துப் பணியில் புதிதாக பயிற்சி எதும் கொடுக்கத் தேவையில்லை.

(7) உரிய கல்வித் தகுதியைப் பெற்றுள்ள அலுவலக உதவியாளர், காவலர், தோட்டக்காரர் முதலியோருக்கு ஓராண்டு காலத்திற்கு எழுத்துப்பணியில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதாவது அவர்கள் செய்யும் பணியை பாதிக்காத வகையில் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் அவர்கள் பதிவுரு எழுத்தர் பணியாற்ற வேண்டும்.

(8) தட்டச்சராக நியமனம் செய்ய அவர்களுக்கு எழுத்துப்பணியில் பயிற்சி தேவையில்லை.

(9) எழுத்துப்பணியில் பயிற்சி அளிக்க கீழ்நிலைப் பணியில் பணிபுரிவோரை தேர்வு செய்யப்படும்போது பணியின் முதுநிலை அடிப்படையில் தேர்வு செய்யப்பட வேண்டும்.

(10) ஒவ்வொரு ஆண்டும் எழுத்துப் பணியில் பயிற்சி அளிக்கப்பட வேண்டிய நபர்களின் எண்ணிக்கை இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் உத்தேச காலிப் பணியிடங்களில் 20% க்கு கூடுதலாக இருக்கக்கூடாது.

(11) அலுவலக உதவியாளர், பதிவுறு எழுத்தர் போன்ற கீழ்நிலைப் பணியிடங்களிலிருந்து பணி மாறுதல் மூலம் வரித்தண்டலர், இளநிலை உதவியாளர், இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்டவர்கள் அரசால் அவ்வப்போது

Scanned by CamScanner

நிர்ணயிக்கப்படும் காலத்திற்கு பவானி சாகரில் உள்ள அரசுப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற வேண்டும்.

(12) பதிவுரு எழுத்தர் பணியிடங்களுக்கு கருணை அடிப்படையிலன்றி நேரடி நியமனம் ஏதும் செய்யப்படக் கூடாது.

(13) மேற்படி பணியிடங்களுக்கு நியமனம் செய்ய தேர்ந்த பட்டியல் தயாரித்து அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு பரிந்துரை செய்ய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கீழ்கண்ட அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும்.

( i ) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் ..... தலைவர்

( ii ) சம்பந்தப்பட்ட மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் ..... உறுப்பினர்

( iii) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பஞ்சாயத்து வளர்ச்சி) ..... உறுப்பினர்

(14) ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ம் தேதிக்கு முன்னர் இதுபோன்ற தேர்ந்த பட்டியல் (வெற்றறிக்கை உட்பட) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதிக்கு முன்பாக தேர்வாணையம் தனது ஒப்புதலை வழங்கும். தேர்வாணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேர்ந்த பட்டியல் அந்தந்த மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்படும்.

(15) வரித்தண்டலர், இளநிலை உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களுக்கு எந்த ஒரு சூழ்நிலையிலும் கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரிவோர் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட மாட்டார்கள். மேலே குறிப்பிட்டவாறு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேர்ந்த பட்டியலிலிருந்தே மேற்படி பணியிடங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். தேர்வாணையத்தின் ஒப்புதல் இன்றி எந்த ஒரு நியமனமும் செய்யப்படக் கூடாது.

(16) மேற்படி பணியிடங்களுக்கு நியமனங்கள் [illegible], ப.ம.நி.சீ.துறை, நாள்: 15.2.94ல் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.மாலதி,
அரசு செயலர்.

பெறுநர்
பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை 5.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை.15

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
உள்ளாட்சித் நிதி தணிக்கை இயக்குநர்,சென்னை.108
அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்.
மாநில கணக்காயர்.சென்னை,18
மாநில கணக்காயர்,சென்னை.35
செயலர்,தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை.2

நகல்.
தொழிலாளர் நலம்(ம)வேலை வாய்ப்பு துறை(க்பு.2) சென்னை.9(5 நகல்கள்)
பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த துறை.சென்னை.9
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்(பொது)துறை, சென்னை.9
ஊரக வளர்ச்சி துறை. சென்னை.9

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner